# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

**<u>O.S.No.28/2023</u>**

DW2–சுதாகர் நாள்.24.02.2026

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

என்னுடைய சொந்தஊர் பூலாம்பாடி ஆகும். 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். விவசாயம் செய்கிறேன். என்அப்பா பெயர் செல்வராஜ். என்னுடன் பிறந்தவர்கள் ஒருஅக்கா மட்டும். அவர் பெயர் சுமித்ரா. ஜெயலட்சுமி எனக்கு அத்தை வேண்டும். அவர் என்அப்பாவின் தங்கை ஆவார். மல்லிகா எனக்கு தூரத்து சொந்தமாகும். அசோகன் அத்தை வீட்டுக்காரர். தாவா சொத்தை கிரயம் வாங்குவதற்கு முன்பு நான் பவர்பத்திரத்தை பார்த்தேன். பவர் பத்திரத்தை 2ம் பிரதிவாதியான என்அத்தைக்கு வாதி சேகர் எழுதிகொடுத்திருந்தார். வாதி வாங்கிய கிரயபத்திரத்தை நான் பார்த்தேனா என்று எனக்கு ஞாபகமில்லை. வில்லங்கம் பார்த்து தான் வாங்கினேன். எந்த வருடம் முதல் எந்த வருடம் வரை நான் வில்லங்கம் பார்த்தேன் என்று எனக்கு சரியாக ஞாபகமில்லை. நான் கிரயம் வாங்குவதற்கு வங்கியில் கடன் வாங்கினேன். என்னுடைய அசல் ஆவணங்களை 3ம் நபரிடம் கொடுத்து கடன் வாங்கினேனா என்று எனக்கு ஞாபகமில்லை. தாவா சொத்தை நான் கிரயம் வாங்கிய தேதி ஞாபகமில்லை. சொத்தை வாங்கி எவ்வளவு நாட்கள் கழித்து தனியாரிடம் கடன் வாங்கினேன் என்று எனக்கு ஞாபகமில்லை.

**வாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.